பொருத்தியதுகைப்படிபொருந்துமவ்வீட்டோன்
வருத்தமில்கேந்திரம்வந்துறின்மன்னும். (௧௧௮)

மன்னியலக்கினம்வருதேள்சிங்கம்
பன்னியலாபமாமைந்தொன்பதில்
அன்னியமூவரிலாரேனுமிருந்து
மின்னியகேந்திரமேவிடிலரசே. (௧௧௯)

மேவுமேழொன்பதாம்வீட்டினல்லதிபன்
ஏவுமேழொன்பான்வீட்டினிலிருக்கத்
தாவியசுங்கன்றானுறுநன்மனை
ஆவலாய்காலேழாண்டினிலரசே. (௧௨௰)

ஆண்டினிற்கேந்திரவானதினல்லோன்
மூண்டிடும்பாவர்களொன்றவிட்டொன்றதில்
தாண்டியசக்கரயோகத்தனபதி
நீண்டியலபாவயதினிசசயமே. (௧௨௧)

## வேறு.

நிச்சயக்கிரகநான்மனையுற்று நின்றிடிற்கேதாரயோகம்
இச்சையன்பைங்கூழ்வழிநடைக்கஞ்சானெழிலுபகாரமேசெய்வன்
மெச்சுமோரைந்துவீட்டினிற்கோள்கண்மேவிடிற்பாசகயோகம்
விச்சைசேர்சவுக்கியன்றனபதியழகன்வெகுஜனமுள்ளவனுமே. ( )

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



## வேறு.

ஆமேகிரகமேழுமனை யமர்ந்தால்வீணையோகமினித்
தாமேநிபுணனெழிலுடையன் சப்தகீதப்பிரியமுளன்
சோமினாலேழொன்றிலுறச் சொல்லுமதிகயோகபலன்
மாமேவாசன்பிரதாபி வந்தேயாண்டுநூறிருப்பன். (௧௨௩)

இருந்தபத்தினான்கிற்கோ விருக்கப்பக்ஷியோகபலன்
பொருந்துந்தேசசஞ்சாரம் புகலுஞ்ஞானிகலகமுளன்
வருந்துசசியினிருபுறமும் வரவேநல்லோர்துரியோகம்
திருந்துயோகனயிஸ்வரியன் றேசஜனத்துக்கதிபதியே. (௧௨௪)

என்றுலொன்றேழ்சுபரிருக்க வினிநால்பத்திற்பாவர்களும்
அன்றேயுறில்வச்சிரயோக மாதியந்தத்தயிச்சுவரியம்
நின்றேசூரதத்துவமு நிகழும்வயதிற்றனபதியாம்
நன்றேமாறிக்கோள்வரினு நாமெயினியவவயோகம். (௧௨௫)

யோகஞ்சுபமாம்லக்கினத்துக் கொன்றேநல்லோர்முன்னிருக்கப்
'போகன்றனவான்வாழரசன் பொருந்தும்பின்னேகிரகமுறில்
ஆகுமவ்வயோகமதா மணிசன்மத்தினிருபுறமும்
தாகமுடனேசுபரிருக்கிற் றானுமாசனெனவருமே. (௧௨௬)

வருமேசென்மலக்கினாதி வந்துமித்திரன்றன்வீடும்
பொருமேயுச்சமனையிரண்டிற் புகருங்கூடிற்றனவானும்
தருமேசென்மஞ்சிங்கமது தன்னிற்பரிதிதானிருக்க
அரிவைமனையிற்புதனிருந்தா னானீசவரசனுமாம். (௧௨௭)

அரசேமூன்றிலீரைந்தி லாறிலிருக்கச்சென்மாதி
சிரசாய்நல்லோர்தனைப்பார்க்கச் செகத்துக்கதிபனாகுமிவன்
சரமாந்துலாத்திற்புகர்மேஷந் தன்னிற்செவ்வாய்கடககுரு
பொரவேவிற்கத்தனபதியாய்ப் பொருந்துமரசன்கண்டீரே. (௧௨௮)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



கண்டரிஷபஞ்சென்மமதாய்க் காணுமதியந்தானிருக்கக்
கொண்டபெரிதிரிகோணத்திற் கூறுந்தேளிற்குருவிருக்க
மண்டுகும்பசனிவரினும் வந்தால்ராஜயோகபலன்
பண்டேயுள்ளபூபதியாய்ப் பாருக்கரசாயிருந்திடுவன். (௮௰௯)

இடமாஞ்சென்மமகரமதாய்ச் செப்புங்காரிதானிருக்க
அடைவேசெவ்வாய்மதிகூடி யானகடகந்தானுறவே
தொடர்சேர்பரிதிமேஷத்திற் சொல்லுமிதுனம்புந்தியுற
வடிவார்கோலிற்புகரிருக்க வாழுந்தீர்க்கதாசனிவனே. (௯௰)

இவனேசன்மநான்கொன்ப தெல்லாக்கிரகமிருந்திடவே
அவனேசாங்கியயோக னதற்குப்பலன்கள்சவுரியவான்
தவமெய்ஞ்ஞானிபாக்கியவா னன்னிற்றுணைவானுமென்றே
நவமாயுரைத்தார்சோதிடத்தோர் நறைமென்கமலமுகத்திருவே. ()

திருவேயிரண்டாம்வீடுமுதற் செறியுமனைக்கொண்டொன்றொழிந்து
வரவேகிரகந்தானிருக்க வாழுஞ்சமுத்திரயோகபலன்
பொரவேசேனைக்கதிபதியாய்ப் பொருந்தும்பாரியநேகருளன்
தருபொன்கீர்த்திக்கதிகாரி தனவானரசனவெகுபிள்ளை. (௯௰௨)

பிள்ளையனுஷமசுபதியின் பின்பாமவிட்டந்தனிற்சேயும்
துன்றுஞ்சென்மமொருபதிற் சூழுந்தேபரிதியுறவதனைத்
தென்றுமதியங்குருநோக்கிற் செறிமூன்றறைநதிற்கிரகமிலா
தனியிருக்கிற்குபேரனைப்போற் றனத்துக்கதிபனெனச்சொல்லாய்.

சொல்லுஞ்சென்மமைந்ததனிற் றொடர்ந்தேபரிதிதானிருக்க
வெல்லுநான்கேழ்பத்ததனில் விரும்பிசெவ்வாய்மேவிடினும்
ஒல்லும்லாபம்பன்னிரண்டி லுடனேபலருமெய்ப்புகர்மேவ
கல்வியிந்திரயோகமென நவில்வர்தமிழ்க்கிளியோர்கள். (௯௰௪)

RangaRakes https://lankathamilnews.blogspot.com

இனியமகரஞ்சென்மமதா யிருக்கச்செவ்வாயதனிலுச்சம்
தனிலேநவத்தின்பன்னிரண்டிற் றனித்தேபுகருந்தானிருக்க
இனமாமிந்துகதிர்கூடி யேழினிற்கப்பிரபலமாய்த்
தனமேதிரளாயார்சசித்துச் * சம்மானடத்துமானபரன். (௩௩௫)

ஆனபரிதிசோமனிவ ரமர்ந்துசுபரங்கிசமேறித்
தானேபலவானாகியிவர் தக்கவியத்திலடையாமல்
ஆனவுச்சவாங்கிசையி லமர்ந்தேசனியைமிகநோக்கில்
ஈனமறவேதிக்குபல வியைந்தின்புறுவன்சன்யாசி. (௩௩௬)

சீலலக்கினதிபதி செறியுஞ்சுக்கிரன்றானாகி
நாலிற்காரிநின்றமனை நாடிச்சுக்கிரன்றானோக்க
வாலசன்னியாசியென மகிழ்ந்தேவிதேசசஞ்சாரம்
கோலுங்கொண்டேதிரிவனெனக் கூறுங்கணிதவல்லோரே. (௩௩௭)

வல்லோர்சென்மச்செம்பாம்பு வரவேயதற்சேழ்சோமனுற
வெல்லுஞ்சோமற்கெட்டதனில் வெய்யோன்சுமத்திரயோகபலன்
சொல்லுங்கிராமபுரந்தரனும் துரையாம்வந்தராக்ஷகனும்
நல்லவருஷமிருபதின்மே னடக்கும்யோகமிருமூன்றே. (௩௩௮)

நடத்தும்பத்துக்கதிபதியு நான்கிலிருக்கநான்காதி
எடுத்தபத்திலுடனிற்க லக்கினாதியுச்சமுறில்
அடுத்தசாபயோகபல னனேகஞ்சேனைக்கதிபதியாம்
கொடுத்தநாலாறதனமீதிற் கூறும்யோகமேழாண்டே. (௩௩௯)

ஆண்டெழுவேழுதன்மீதி லானசாபயோகபலன்
நீண்டசிவனுள்ளளவு நிறைந்தேபத்திற்கருநாகம்
பூண்டபத்தாமிடத்ததிபன் பொருந்துஞ்சன்மந்தனிலிருக்க
வேண்டுஞ்சென்மன்பாக்கியத்தில் விளங்கிற்றேசாபதியாவன். ()

* சம்மான் - கப்பல்.

www.facebook.com/ebooksintamil



ஆவன்பத்தாதிபனிருந்த வங்கிசாதிசென்மத்தோன்
மேவும்பத்தையிருவோரும் விரும்பராகயோகபலன்
கோவாம்வித்தைதனவானுங் கூறின்வயதுபதினாறில்
பூவுக்கராசாய்மூவாண்டு பொருந்திடக்குந்தானிதுவே. (௫௪௧)

இதுவேகுருவுமொன்பதினி லிருக்கவொன்பானதிபதி
துதிசேரேழிலிருந்திடவே சோமன்சுபரோடெங்குறினும்
கதிசேர்நாகயோகபலன் கண்டவயதுபதினாறில்
புதிதாய்மூன்றாண்டளவுமிகப்பொன்னைஞ்ஞூறுதேடுவனே. (௫௪௨)

தேடும்லாபன்றனபாவத் திறல்சேரதிபனுச்சனெனின்
நாடுமைந்தாம்வீட்டாதி நண்ணுந்தனத்தைப்பார்த்திடவே
கூடும்பேரியோகபலன் குதிரையானைநரர்தேரும்
ஊடுமொரூறதன்மேலே யோங்கும்வருஷநாலளவே. (௫௪௩)

அளவேயொன்பான்றனிற்புகரு மமர்ந்தேயொன்பானதிபதி
வளமாமதிக்கேயொன்பதனில் வந்தாற்பதுமயோகபலன்
தளமோடாசர்புடைசூழத் தானும்பாராண்டகத்திலிருந்
துளவாந்தானமைம்பதின்மே லோங்கும்வருஷமைந்தளவே. (௫௪௪)

ஓங்கும்லக்கினதிபதி யுற்றவீட்டிற்கதிபதிதான்
பாங்காய்ச்சேர்திரந்திரிகோணம் பற்றிமூலத்திரிகோணம்
தாங்குமுச்சனானலுந் தக்கபுரத்துக்கதிகாரம்
வீங்கும்பர்வதமேழைந்தின் மேலொன்பானுமாண்டுளதே. (௫௪௫)

உளதேலக்கினதிபதி யுற்றவீட்டுக்குடையோனும்
அளவாமதிவீட்டதிபனுச்ச னாகிச்சோமனாலேழிற்
களவேசேந்திரமேறிவரக் காகளயோகந்திரவியவான்
வளவனாகுநாலேழ்மேல் வயதுள்ளளவும்ரசவாதி. (௫௪௬)

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வாதிரண்டாமைந்தாதி வருமேபாக்கியாதிபனும்
ஓதுஞ்சென்மந்தனிலுற்றே யோங்குமரசன்பார்வையுறில்
ஈதுதாந்திரியோகபல னிவனேவெகுதேசாதிபதி
நீதிநடத்தும்பன்னிருமே னேரும்வயதோராறளவே. (௩௪௭)

வயதாறெட்டுமேன்மூன்று வருஷமிருதங்கயோகபலன்
சுயலாபாதியசுராச்சன் சுங்கன்கூடியிருந்தமனை
நயவீட்டுடையோன்பத்தேழி ஞன்கிலொன்பானமர்ந்திடவே
செயமாயரசர்க்கதிபதியாந் செப்புஞானிதனவானே. (௩௪௮)

செப்புமிலக்கினவர்க்கேற்றே செறிந்தேயிருக்கச்சென்மாதி
ஒப்புஞ்சுபர்களுடன்கூடி யுறுஞ்சன்மாதிசன்மதனைத்
தப்பாமுழுநோக்காகவிது சகஸிரயோகஞ்சவுக்கியவான்
அப்பாவைம்பானைந்திம்மே லானவருஷநாளகிரிதே. (௩௪௯)

இனிதாங்கன்னிசென்மமதா யிரண்டோடொன்பானதிபதி
தனியேசுங்கனிருந்தகுசித் தோனுமரசனுடன்கூடி
மனுவாந்தனபாவத்திருக்க வயதுபதினாறதன்மேலே
கனியார்சீவனுள்ளளவு நடக்குஞ்சாம்பிராச்சியயோகம். (௩௫௦)

யோகமாதியச்சமெனு மியாதிருந்தங்கிசாதிபதி
பாகஞ்சென்மந்திரிகோணம் பத்திலிருக்கச்சேயுச்சம்
வாகுபெறவேபத்தாதி வந்தேழிருக்கத்தூர்க்காதி
யோகமுடனேவனக்சனுக்குந் தனியேயாசாய்ப்பொருந்திலேன். ()

பொருந்திவெய்யோன்பாக்கியத்திற் புகக்தன்னுடனோன்காதிபதி
இருந்திருக்கப்பத்தாதி சேர்ந்தோரிரண்டிலேழிலுற
வருந்தாத்தூர்க்கத்ததிபதியாய் வையமுழுதுமரசாளந்
தெரிந்தேயோகபலனென்று செப்புங்கனிதமாதவனே. (௩௫௨)

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



மாதேநான்காமாதிபதி வந்தேயிரண்டாமாதியுடன்
மீந்தேகூடிப்பாக்கியத்தில் விரைந்தேயிருக்கப்பத்தாதி
போதுமிரண்டிற்பலவானாய்ப் பொருந்தியிருக்கலாபாதி
ஓதுலக்கினாதிபதி யுச்சங்கோடிலயிஸ்வரியன். (௱௫௧)

சுரவேசென்மந்திரமாகச் சுக்கனிருக்கச்சென்மாதி
வரவேதிரிகோணத்தாற்றான் மன்னனாகுஞ்சிவபூமிக்
குரவோன்சேனைக்கதிபதியா மொருமைஞானிதுரகாதி
இரப்போர்தமக்கும்வேதியாக்கு மீவான்சிவபரியந்தம். (௱௫௪)

அந்தநான்காமிடந்தனக்கு மதிபனுச்சனவ்வீட்டோன்
வந்துமைந்தாமதிபனுடன் மகிழ்வாய்க்கூடப்பாக்கியாதி
மூன்றுஞ்சமரயோகமென மொழியும்பலன்களசேனாதி
சொந்தவருஷமைம்பதின்மேற் றுலங்குமரசனாவானே. (௱௫௫)

ஆவாரைந்தாமதிபதியு மன்பாம்லாபத்தாதிபனும்
போவாரொன்றான்றனிலிருக்கப் பொருந்தும்பத்தாமதிபனைந்தில்
கோவேயாகுஞ்சிவயோகங் குதிரையானைநரர்தேரும்
மேவும்வெகுதேசாதிபதி விளங்குபரமாயுளவனாம். (௱௫௬)

உள்ளபத்தாமதிபதியு மொன்பானங்கிசந்தானேறி
மெள்ளவிரண்டாமிடத்திலுற விரும்பியொன்பான்றனஞ்சேரில்
கள்ளவிஷ்ணுயோகபலன கதித்தவரசாட்சொழுவே
கொள்ளுமலக்ஷம்பொன்றேடிக்குலாவியிருப்பனீரேழ்மேல். (௱௫௭)

மேலாம்பாக்கியகேந்திரத்தின் மேவிக்குருவும்லாபத்திற்
கேதுங்கேந்திரச்சுக்கிரனுங் கிட்டியிருவர்மீனமாறிச்
சாலவிருக்கவயன்யோகந் தனவானகீர்த்திப்பிரதாபன்
மாலாய்வளமொன்பதின்மேலும் வயதுள்ளளவுமன்னவனாம். (௱௫௮)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



மன்னுபத்தாதிபனிருந்த வங்கிசாதிபதிபத்தில்
மின்னுமுச்சமாயிருக்க விலக்கினதியுடன்கூடச்
சொன்னகவுரியோகபலன் றுரையாங்கீர்த்தியுதாரகுணன்
பொன்னுமணியுமாறுறிற் பொருந்துமாண்டெண்ணிரண்டே. (௩௮௯)

ஏயபாக்கியாதிபதியிருந்த வங்கிசையோனென்ப
தூயவுச்சனோந்தாதி தொடர்ந்தேகூடியுறநோக்கக்
காயலக்ஷ்மியோகபலன் கனத்ததுரையாய்த்தனவானாய்ப்
பாயும்பரியும்நாற்பதின்மேற் படைப்பன்பத்தாண்டிவன்பாரில் ()

பாரிலாபாதிபனிருந்த வங்கிசாதிலாபத்தில்
ஊருங்கோளுமுச்சமதாய்ப் பாக்கியாதியுடன்கூடப்
பேரும்பாரதியோகபலன் பெரியகண்ணன்சிற்றுணன்
நாரிவெருவாமறுநான்மே லும்வயதெட்டினில்யோகம். (௩௯௧)

யோகமூன்றுதிலாபாதி யொருமித்தேமுறவேழாதி
வாகுபனிரண்டினினிற்கவரசன பனிரண்டாதியிவர்
ஏகபாக்கியர்தனனிலுறவி துவே கலாநிதியோகபலன்
போகியரசன்மதிமந்திரிபொருந்தும் பதினெட்டுளதே. (௩௯௨)

உள்ளசன்மாதிலாபத்தி லுறவேயந்தலாபாதி
தள்ளுஞ்சன்மந்தனிலிருக்கத் தனத்தானத்தான்பத்திலுறக்
கொள்ளும்பத்தோனிரண்டுறவே கொண்டசன்மந்திரமாக
வள்ளவிந்திரயோகமெனவழுததும் பலன்களினிதுரைப்பாம். ()

உரைப்பாமதுரகல்வசனமுயர்ந்த தூர்க்கத்ததிபதியாய்ப்
பரப்புகிரைந்தவெகுபூமிபதியிற் காசாய்ப்பேரிகையும்
இரைக்குமல்லரிவாத்தியமு மினியதனவான்ஸ்திரீலோலன்
நரைக்குமுன்னேயாறுநினல்கும் வருஷமெட்டாமே. (௩௯௩)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



ஆமேதேளுமிலக்கினமா யரசன்சுங்கனிருவருறத்
தாமேலாபப்புதனுர்சக் தரிக்குமதனயோகபலன்
காமர்வனிதையிச்சிக்குங் கருணையுள்ளசவுந்தரியன்
தோமின்மனோகரமந்திரியாத் துலங்குமிருபான்மேலெட்டே. ()

எட்டுவருஷம்பதினைந்தி னிதன்மேல்யோகங்கலாநிதியாம்
மட்டேசென்மஞ்சராங்கிசத்தில் வரவேயொன்பான்சென்மமுறத்
தொட்டநான்கோனரசனுடன் றுலங்கவைந்திற்பத்தாதி
ஒட்டியிருக்கலாபத்தி லோங்குமரசன்வெகுதேசம். (௱௬௬)

தேசக்குருவுக்கொருமூன்றிற் செறிந்தேசுங்கன்றானிருக்க
வாசஞ்சுங்கற்கொன்பதினின் மதிதானுறவேபத்தாதி
நேசநான்கிலுறத்தனவா னிருபனுகிமூவொன்பான்
போசனெனமேன்மூவாண்டு பொருந்துநகரநாட்டரசே. (௱௬௭)

அரசேலாபமிரண்டொன்பா னுதியவரவர்தம்மனையிற்
சிரசாயிருக்கமால்யோகஞ் சேனைக்கதிபன்பூபாலன்
பொரவேகீர்த்திக்கதிபதியும் பூமிக்கரசனமைச்சனுமாய்த்
தரைசேர்மூப்பத்தாறின்மே லெட்டுவருஷந்தனஞ்செயனே. (௱௬௮)

செயமேமேஷஞ்சென்மமதாய்ச் செங்கதிருறவேசனிபத்தில்
தயவாயிருக்கவொன்பதனிற் குருவுமதியுந்தானுறவே
நயமேவிசுவாவசுயோகநடக்குந் தனவான்றேசாதி
கயமுநடத்தும்பதினுன்மேற் கண்டவருஷம்பதினைஞ்சே. (௱௬௯)

அஞ்சேபாக்கியாதிபதி யிருந்தவங்கிசாதிபதி
துஞ்சாதுச்சமவனுடனே சொல்லுமிலக்கினதியுற
விஞ்சாநாளயோகபலனெல்லார்க் கரசன்ஸ்திரீலோலன்
வஞ்சமறவேகுருபத்திவமுத்து மாறேழ்பதினெண்ணே. (௱௭௰)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



எண்ணும்லக்கினங்கிசையில் பத்தாமிடத்தாதிபனிருக்க
ஒண்ணும்பத்தாமங்கிசையிலுறச் சன்மாதியரசனுடன்
கண்ணுறிவரையவர்பார்க்க நாடுங்கார்முகயோகபலன்
பண்ணுஞ்ஞானிமூவொன்பான் பாரிலெட்டுவித்தையுளன். (௬௭௧)

வித்தைலாபத்ததிபனோர்தின் மேலவைந்தாமாதிபதி
புத்திலாபத்திருந்திடவேபுகரு நான்கோன்பதியுடனே
பத்தியிருக்கமகபதிபோற் பாரைமுழுதுமாசாள்வன்
உத்தபோகியேழாறில் யோகநடக்கும்பதினாறே, (௬௭௨)

பதியாமாசன்மதிபுகரும் பரிந்துமூவர்தனத்துறவே
விதியாம்பாக்கியாதிபதிவிரும்பு நோக்கமுற்றிடவே
கதிர்சேர்யோகங்கேதாரி காணும்பதாதியானைபரி
துதிசேரைம்பானிரண்டாண்டு தொடங்கியேழும்பிரபலமே, ()

பலமாம்பத்திற்சுருநாகம் பத்தாமாதிசனியிருவர்
பலமாய்மூன்றிலுற்றிடவே பகருஞ்சண்டமாருதமாம்
தலமேசேர்றுந்தன்மங்க டானஞ்செய்யுஞ்சாத்திரவான்
உலவியுண்பான்பராக்கிரமன் யோகம்பதினோர்தன்மேலே. (௬௭௪)

மேலேபாக்கியாதிபதி மேவுமங்கிசநாதன்றன்
ஏலவெந்தாங்கிசையேறி யிருந்தவங்கிசத்தோனேனும்
நூலமந்தவங்கிசையிற் றலங்குமுச்சனானாலும்
சாலக்கினதிகேந்திரத்திற் சுங்கனுடனேதானுறவே, (௬௭௫)

வேறு.

தானுறும்பலன்கள்பாரிசாதமாந் தனவான்யோகம்
மானனையார்க்குநேயன் மன்னவர்கப்பங்கட்டும்
தேனுவெண்கொடையான் காத்திரிசேயுளனல்லூண்கீர்த்தி
ஆனதோரிருபதின்மே லாயுளின்பரியந்தந்தான். (௬௭௬)

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



## வேறு.

அந்தலாபமுற்றமனைக் கொன்பானதிபன்சோமனுடன்
வந்தேலாபந்தனிலிருக்க வாஞ்சன்மாதிநோக்கமுற
விந்தகேசாரயோகபலன் மேவும்பேரிமல்லாரி
சொந்தகரிமாவிருபது மூன்று.ண்மேல்வருடமிருபதுமே. (௱௭௭)

நலந்தரும்பாக்கியாதிபதி சூழ்ந்தங்கிசாதிபதியுசசம்
இலங்கியிரண்டிலுற்றிடவே யிரண்டாமாதிபாக்கியத்தில்
புலங்கள்கொடுக்குஞ்சுபயோகம் படிபபலதியாசாள்வன்
குலங்கள்போற்றமையொன்பான் கூறுமிருபத்தோராண்டே. ()

ஒன்றேயேழாமாதிபதி யொன்பானிருக்கவொன்பஃதோன்
கன்றேயேழிற்றாரகையின் ராசிக்கதிபனிவர்களுடன்
ஒன்றியிருக்கச்சரிதாமயோக மாசாஞ்சேனையுளான்
என்றேதிமுப்பதின்மே லியங்கும்வயதோவையாறே. (௱௭௯)

ஐயாவிரண்டிற்குருவிருக்க வமர்ந்தேநான்கிற்சுங்கனுறப்
பொய்யாதேழிற்செய்மதியும் பொருசன்மாதிக்பருடனே
நையாதிருக்கவிதன்பலன்களுறுங் காம்பயோகமதாம்
வையம்புகுந்தீர்பத்திரண்டு வருஷமாறுஞ்சவுரியமே. (௱௮௰)

மேயவைந்தாமதிபனென்பான் வீட்டிலிருக்கலாபத்தோன்
தூயமதியுமிரண்டிலுறச் சோட்சதானம்பண்ணுவனே
ஆயவரசர்சன்மானமதிகம் பெறுவனளயோகம்
காயபலன்களையொன்பானதன்மேன் மூன்றாண்டாங்காணே. ()

காணும்லாபாதியத்துச்சன் கண்டசுங்கனுடன்கூடி
வேணுஞ்சன்மாதிகேந்திரத்தின் மேவியிவர்களிருந்திடவே
நாணும்பிரபையோகபல னடத்துந்தியாகிவெகுபோகி
தானுவரசன்சேனைதனி மூவைந்தினெட்டாண்டே. (௱௮௨)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



ஆண்டமதியுங்குருவிருவ ரமர்ந்தேயொன்றிலுற்றிடவே
பூண்டவிரண்டோன்லாபத்திற் பொருந்தியிருக்கச்சன்மாதி
நீண்டசுபர்களுடன்கூடிநிற்கச் சுசுபாயோகபலன்
வேண்டும்வருஷநாற்பான்மேல் விளம்புமூன்றுந்தேசாதி. (௯௮௫)

சாதிலக்கினாதிபதியிருந்தங் கிசையோனுடன்சசியும்
ஓது மிவரைப்பத்திடத்தோ னெங்குமபார்வைநோக்குறவே
வாதயூபயோகபலன் மந்திரிமண்டலாதிபதி
நீதிகடத்தும்பதியொன்றில் நேரும்வருஷமூன்றினுமே. (௯௮௪)

இனிதாம்லக்கினத்ததிப னிருந்தங்கிசாதிதிரிகோணம்
மனுவாயுற்றேகுருசுக்கன்வரவே யிவர்கடாமிருக்க
நனியார்ப்பத்திற்சனியுச்சமாகிற் றாமயோகபலன்
தனியேபத்தொன்பான்மேலே தரணியாள்வனெண்டொன்பான். ()

ஆறுமைந்தாமதிபதிதானைந்தே ழொன்பானமர்ந்திடவே
தாறுமரசன்சன்மாதிதானுங கூடியங்குறினும்
நீளுஞ்சோமனொன்பதினினிற்கக் கதிரோனுச்சமெனக்
கேளுங்காந்தர்வயோகமெனக் கிடைக்கும்பலன்களுரைத்திடுமே. ()

உரைக்கும்பலவான்பிரசித்த னெங்கும்புத்தியுள்ளவனும்
தரைக்குமரசனுபாணந்தானும் வெகுவாய்ப்பூண்டிடுவன்
துரைக்கும்புத்திசொல்லிடுவன் சுகந்தகீதப்பிரியனென
விரைக்குமறுபத்தாறதன்மேல் விளங்கும்வருடமெட்டுளதே. ()

உளதேபத்தாமதிபதிதா னுற்றவங்கிசத்தோன்பத்தில்
அளவேசுங்களுடன்கூடவான ராசிக்கதிபதிதான்
களவாயிருந்தங்கிசநாதன் காணுமுச்சம்பிராத்திமமாம்
இளகாவரசன்பூபாலனி ரெட்டதன்மேலேழென்ப. (௯௮௮)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



பதிசேர்பாக்கியாதிபதி யிருந்தங்கிசாதிபகோன்கில்
துதிசேர்கீர்த்திகோன்காதி துலங்குகேந்திரமுச்சத்தில்
விதியாகிற்கின்முதியோக விளங்குமரசர்சன்மானன்
கதிசேர்சுகவான்பாக்கியவான் காணுமிருபான்கொற்றவன்மேல். ()

தயமாஞ்சன்மத்தச்சனுறத் தானிசுதனுமுழுநோக்க
நயமாமிடத்தோன்காரியுட னன்னைப்புலவனிதன்பெயரோ
கவனசண்டயோகபலன் கருணையபசர்மதிமந்திரி
இவனன்வயநயன்னிரண்டா மிதனைமேன்மூன்றுந்தனபதியே. ()

பதிசேரோன்பானுதிபதி பண்பாய்மூன்றிலிருந்திடவே
துதிசேரரசன்முழுநோக்கச் சொல்லுங்கானயோகபலன்
அதிசேருபன்முசத்தழகனுடை பணிதியுள்ளவனும்
கதிசேர்வயதுபதினறுமிற் காணுமூன்றின்முசுவபிப்பம். (௫௧௧)

வரியமைந்திற்குருவிருக்க வைந்தாமாதிசுபரிருவர்
நசையாய்க்கூடிததானிருக்க நாடும்பத்திற்சனியுறவே
பொசியுமகிடயோசபலன் புடவிவனைதூநகதிபதியாம்
முசியும்வருஷமுப்பதினைமேன் மூன்றுமெட்டுமெயரசாம். (௫௧௨)

வேறு.

பனிரெண்டிராசியென்னும் பதிலக்கினமாகக்கொண்டு
இனியதாய்தந்தைபுத்திர ரிசைமனையுடன்வந்தோர்கள்
தனியுமாயுருத்தாயங் கடனலாபவாகனங்கள்
முனியும்பாக்கியகர்மங்கண் முதற்பலன்மொழிந்திடுரே. (௫௧௩)

பாக்கியத்திரையுங்கர்மத் தாதியும்லக்னத்தோனும்
தாக்கியேகூடினாலுந் தயவுடனென்றிற்கொன்று .
நோக்கியகண்ணுற்றாலு நண்ணியவழிவுகேள்வி
வாக்குகள்செலுத்துங்கோவாய் மண்ணினில்வாழ்வன்கண்டீர். ()

7

https://lankathamilnews.blogspot.com

RangaRakes

www.facebook.com/ebooksintamil



ஒன்பதற்கொன்பதேனு மொருபத்திற்குப்பத்தேனும்
தன்பதியைந்துமேழுந் தானந்தவீட்டோன்றன்னோ
டன்புடன்லக்கினாதி யணுகிடவலதுநோக்கத்
துன்பமற்றன்றிச்செல்வஞ் சூழ்மனனாவன்சொல்லே. (௩௯௫)

ஆறுடனேழாமாதி யவருடன்லக்கினாதி
பேறுடன்கூடினாலும் பெருமையாய்க்கண்ணுற்றாலும்
வீறுடன்மிக்கசெல்வ மேன்மையாம்பாக்கியங்கள்
சேறுசெய்திருந்துவாழ்வன் செகத்துக்குமன்னனாவன். (௩௯௬)

கேந்திரத்தானத்தாதி திரிகோணத்தோனுங்கூடிச்
சேர்ந்திடவலதொன்றுக்கொன்றிகழவே நோக்கினாலும்
பேர்ந்தவர்திசைகடன்னிற் பூரணமந்திரியோகங்கள்
சார்ந்திடுஞ்சித்தமாகச் சகலபாக்கியமென்றோதே. (௩௯௭)

வாகனாதியுங்கோணாதிநாதியுங் கூடமற்றும்
தாகமாயொன்றுக்கொன்று சார்ந்துடன்பார்ப்பாராயின்
ஏகமாய்ப்பதுமத்துற்ற விலக்குமியோகமென்பர்
போகவான்சகலபாக்கியம் பூரணம்பூபாலன்கண்டீர். (௩௯௮)

தனபதிபாக்கியத்தோன் லாபத்தோன்சந்திரகேந்திரம்
தனின்மிகவிவர்களாரே சார்ந்திடப்பதினொன்றைந்தும்
வினவியகுருவினாட்சி வீடெனிற்செல்வமுள்ளான்
புனையிழையாளேலட்சுமி யோகமாய்ப்புகலுவாயே. (௩௯௯)

ரண்டினிற்கதிபன்பாக்கியந் தன்னிலும்லாபந்தன்னில்
தண்டிடாப்பாக்கியாதி தானுறில்லாபத்தாதி
ஒண்டொடியுடனின்றாலு மாராஜயோகமென்று
கொண்டாற்கிரகஞ்சொந்தக் கிரகமுற்றிருக்கின்மன்னாம். (௪௦௦)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



# தாரித்திரயோகம்.

## வேறு.

கண்டசன்மலக்கினங்கள் காரிமனையாயதிற்சோமன்
மண்டியிருக்கவவன்றனக்கு வளர்பன்னென்றிலராசனுறக்
கொண்டதாரித்திரங்கடகம் குறிலக்கினமாயதிற்காரி
மிண்டியிருக்கப்பன்னொன்றில் வேந்தனிருக்கத்தரித்திரமே. (௪௦௧)

மேவுங்குடும்பந்தனிற்பாவர் வெகுவாய்ப்பலன்களன்றியுறப்
பாவக்கிரகந்தான்பார்க்கப் பாவுஞ்சன்மங்குடும்பத்தின்
கோவும்பலன்களற்றிருக்கக் குறைவேபடைத்துத்தானுண்ணத்
தூவுமன்னங்கிடையாமற் சோம்பித்தரிப்பன்சுகமில்லான். (௪௦௨)

தரிக்குஞ்சன்மலக்கினத்துஞ் சசிதானிருந்தலக்கினத்தும்
பரிக்குமுபயபாரிசத்தும் பாவரிருக்கத்தரித்திரமாம்
விரிக்குமுன்னோர்பாரிசத்தின் மேவிலுடனேதரித்திரமாம்
தெரிக்கும்பின்னேயுறிற்பாலி யத்திற்றரித்திரஞ்சேரும். (௪௦௩)

சேருஞ்சன்மகேந்திரத்திற் றிரிகோணத்திற்குடும்பத்தில்
மேருவியத்திற்பாவர்சிற்கின் மிகவுந்தாரித்திரயோகம்
வாருஞ்சன்மலக்கினத்தின் மதியஞ்சனியுமருவுகினும்
நேருஞ்சன்மந்தனிற்பாவர் நிற்கிற்றரித்திரநிறையும். (௪௦௪)

நிறையுமிரண்டாமிடத்திற்கோ ணீங்கமூன்றதாமிடத்தில்
உறையுங்கிரகமுண்டாயினேதங் * கேமுத்திரயோகம் [யோன்
குறையும்பலனே வையங்கைக் கொண்டே யுண்ணுங் குறைவுடை
நறைசேர்குழலாயிரண்டிற்கோ ணைண்ணிலில்லைநல்குரவே. (௪௦௫)

---

* கேமுத்திரமென்பது—பிச்சையெடுத்துண்ணல். இது கொடியபாபிகளுக்குண்டாவது.

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



குரவார்மதிக்குமுன்பின்னுங் குணமாகல்லோர்குறுகாரேல்
வரவான்மதியின்கேந்திரத்தின் மருவிஞலுயிருபுறமும்
உரவோர்தாயில்லாதிருந்தா லுண்டாங்கேமத்திரயோகம்
திரவேற்கண்ணுயவெகுபாவரு செய்தார்க்கித்தச்செயலாமே. (௪0௬)

செயலாருடலேச்சனிநோக்கத் திகழ்மேஷத்திற்சேய்மதியும்
இயலாயிருக்கப்பிறந்தவனு யிரந்தேயுண்பனெந்நாளும்
பயிலார்சனமமெட்டிடதரைப் பகுபாதசன்பார்த்திடினும்
கயலார்விழியாய்சீர்கேடன் காணுமெனவேகருதிடுமே. (௪0௭)

மேலாங்கிரகமெட்டுமொரு வீட்டிலொன்றியிருந்திடவே
சாலுங்கோள்கள்யோகமிது சாற்றுஞானிதரிததிரனும்
மாலாயிரண்டுவீட்டிலுற வருமேதான்கையோகங்கள்
நீலாய்மக்தனிட்டோனில்லாதவனே லச்சையிலான். (௪0௮)

ஆனுன்மூன்றிராசிதனி லனுமிக்கிரகமிருந்திடவே
தானேசூலயோகமதாஞ் சரீரக்தன்னிற்காயமடு
மானேகுலத்திற்பாதகந்தான் வருமேயிவன்றன்காமதனல்
ஊனம்படுத்துந்தரித்திரவா னுதவான்றமருக்கின்வசனம். (௪0௯)

வசமேழெட்டொன்பதுபத்தின் மருவியிருக்கிற்றிரியோகம்
நிசமாயீனத்தொழில்புரிவன் சோம்பனீசனடையுடையன்
தசமேலாபமொன்றுவியர் தன்னிற்கிரகந்தாமுறவே
வசையாயீனத்தொழில்புரிந்து மன்னுசெலவுகொஞ்சமதாம். (௪௧0)

தாமேசன்மஞ்சசியுறவே தானுங்கேந்திரங்காரியுறில்
ஆமேவியத்திற்குருவிருக்கி லேயமெப்பனெனப்புகல்வர்
தோமேவியமாறெட்டதனிற் றொடர்சன்மாதிதானிருக்கத்
தீமைபுரியுங்கோள்கூடத் தேசமெல்லாகடந்திடுவன். (௪௧௧)

கடக்குந்தனபாக்கியமெட்டைந்தெனு நால்வீட்டிற்பாவருறக்
கொடுக்கும்வெகுவாய்த்தரித்திரங்கள் கூறுமூன்றுமனையாயின்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



கொடுக்குமுக்காலிரண்டிலரை குலவுமொன்றிற்காலாகும்
விடுக்குமிதனிலுறப்பாவர் விரவியிருக்கிற்றரித்திரமே. (௪௧௨)

மேவுமொன்பானதிபநியை விடவெட்டாதிபலவானுய்த்
தாவியிருக்கத்தரித்திரமே தபனனிசாங்கிசந்தன்னில்
மேவியிருக்கலாபாதி விரவததாரித்திரயோகம்
ஏவும்விழியாய்சோதிட்தோ ரியம்பும்பலன்களிவையாமே. (௪௧௩)

## அங்கவீனம்.

### வேறு.

கண்டபனிரண்டாம்வீட்டோன் கனத்ததிரிகோணமேறிக்
கொண்டகேந்திரத்தினிற்க வவனுடுகூடிராகு
அண்டியேநிற்கப்பாவ ரவர்களைப்பார்த்திருக்க
எண்டிசையுலகிலங்க வீனனுயிருப்பனென்னே. (௪௧௪)

சோமனுநிற்பன்னிரண்டிற் றெடர்ந்தேநிற்கவோரிரண்டில்
ஆமேசெவ்வாய்தானுறவேயவரைப் பாவர்மிகநோக்கப்
போமாமங்கவீனமெனப்புகல்சேர் நல்லோர்பார்வையுறில்
தீமையில்லைத்தீர்க்காங்கஞ் செப்பாய்பலனீசிர்நித்தே. (௪௧௫)

சிந்தைகாரிகுருபரிதிசெவ்வாய் ராகுகேந்திரத்தில்
அந்தமுடனேதிரிகோணத் தனுகாதிருககப்பலனில்லார்
வந்தாலங்கவீனமுறுமருவும் விசேசசஞ்சாரம்
கொந்தேபுதல்வாநாசமுறு நொய்யன்மிடியன்கண்டீரே. (௪௧௬)

### வேறு.

இந்துவோடசுபர்கூடி யீரிரண்டெய்திநிற்கள்ளன்
முந்திரண்டிற்சேய்மாந்தி முழுப்பாவருநிற்றீகோயன்
அந்தமிற்பொய்யன்பெண்டிர் வியபிசாரியாண்மையில்லான்
சிந்தனைவியபிசாரத்த னிசமிலான்றீயவூணன். (௪௧௭)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



### வேறு.

விடுமிலக்கினமீதிற்குசனுற
உடனிரண்டிடத்தோனுமாறுதிபன்
இடமுடனிவர்சேர்திடிற்காதனும்
கொடியபாம்பிவரோடுறிற்கொய்படும். (௪௪௮)

## நித்தியபலன்.

### வேறு.

செங்கதி ருறுநட் சத்திர முதலாய்த் திங்களுட் சத்திர மட்டும்-சேரவே யெண்ணி யிரண்டினிற் பெருக்கித் தெரிந்தவன் சன்மநாண் முதலாய்ப், பொங்கமா யற்றைநட் சத்திர மளவும் பொருந்திய தொகையுடன் வாரம் - போதமு வகையுங் கூட்டியொன் பதினிற் பொற்புடன் கழித்தசே டங்கள், இங்கிதஞ் செறியு மிரவிசந் திரன்சே யிராகுபொன் சனிபுதன் கேது - இனியசுக் கிரனு மகாதிசைப் படியே யிசைதொகை பாதிநா ழிகையாம், அங்கது நித்திய பலனெனச் சொல்வ ரவைதனில் வரும்பல பாவம் - அருண்மகா திசையின் பலனதுபோல வறிந்துநித் தியபல னுரைமின். (௪௪௯)

### வேறு.

இரவிராகுபுகரொருமூன்றதாம்
குருமதிநவமாங்குசன்பனனிரண்
டொருபுதனைந்தாறஞ்சனிகேதுவெட்
டுருதிசைக்குறுநாழிகையோதிடே. (௪௫௦)

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# துவாதசபாவபலன்கள்.

## முதலாம்பாவம்.

### இலக்கினபலன்.

ஆடரியேறில்வெய்யோனமர்ந்திடின் மற்றக்கோள்கள்
காடியேயுடயலக்கினத்திலும் பலமாய்நண்ணில்
கூடியகுழவிரண்டாங் குசனேழிற்கதிரோனெட்டில்
நீடிடிற்சரத்தின்மற்றோர் நின்றிடிற்பலன்களில்லை. (௪௨௧)

சந்திரன்பாவராசிதனிற் குசன்றிரயக்காணத்
துந்திடிற்சசிக்கிரண்டிலாறு பன்னிரண்டினல்லோர்
வந்துதானிருக்கிற்பெற்ற மகவுடன்பிறக்கும்பாம்பு
செந்திருமாதேபாம்பாய்ச் செனிக்கினுஞ்செனிக்குந்தானே. (௪௨௨)

காவிடத்ததிபன்பாக்கியாதிப னிலக்கினத்தில்
சாலவேநல்லோர்பார்க்கத் தானுறில்ராசபூச்சியன்
கோலியசனியொன்றேழிற் குசனுறச்சுங்கனிந்து
மாலிவன்வியத்துணிற்க மருவுவன்றகப்பனூரில். (௪௨௩)

பண்ணுறும்லக்கினத்தையிந்து பாராமலிருக்கவிந்து
நண்ணியராசிலக்கி னஞ்சாராசியாக
ஒண்ணியசுதன்சராங்கி சம்பெறாவுதித்தானாகில்
திண்ணமாய்த்தகப்பன்றேசாந் திரத்தினிற்றிரிவன்றானே. (௪௨௪)

பரிதிக்கோரிரண்டிற் பாவக்கிரகங்கள்பாவராசி
மருவிடிற்றந்தைதேசாந்திரத்துறு மற்றும்பாவர்
உரிமையாம்பாவராசி புகிற்கிர்க்கைந்தேழொன்பான்
பெரும்பாவர்நிற்கத்தந்தை பிறையுளான்பாதேயத்தில். (௪௨௫)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



செய்க்குப்பன்னொன்றிலிந்து சேர்கிலோகுழவிக்கினம்
ஆகியசல்லோர்காணி லவனை மற்றோர்வளர்ப்பர்
வீக்கியபாவர்காணில் வியமதாங்குழவியேகும்
பாக்கியரிக்கைதகாணிற் றகப்பன்வாழ்பதியிற்சென்மம். (௪௨௬)

நீசத்தானத்தினல்லோர் நின்றசந்திரனைக்காணில்
பேசுவர்மாத்தின்கீழே பிறந்திடும்பிள்ளையென்றே
பூசல்செய்பாபர்நீசம் பொருந்தியசசியைக்காணில்
ஏசுறுநீசர்வீட்டிற் பிறந்தசேயெனச்சொல்வாரே. (௪௨௭)

இந்துவுநல்லோரேகராசியி லிருக்கிற்காண்கில்
பந்தமாமனிதரில்லாப் பதியிலுற்பவிக்கப்பண்ணும்
சந்திரற்கேழிற்காரி தபனனுகக்கேழிற்சேயும்
வந்திடத்தந்தைதாய்க்கு வருத்தமுமரிட்டமாமே. (௪௨௮)

சவுரிக்கேழிடத்திற்செவ்வாய் சானுறிற்குழவிக்கினம்
பவுரிகொளிலக்கினதி பாவரோடிசைந்தாறெட்டில்
உவயிருபன்னிரண்டி லுற்றிடில்ரோகவானும்
றுவல்சென்மலக்கினதி பலமிலாதிருக்கினேயாம். (௪௨௯)

ஆறுடனிரண்டிடத்தி னதிபனுக்குசனுமூன்றில்
வீறுடனிலக்கினத்தின் மேலிற்காதறுமறுதேல்
சீறியசெவியில்ரோகஞ் சேருநற்கணைக்கனவீட்டில்
பேறுடன்காரிநிற்கினபுஞ்சனுய்ப் பிறப்பனகாணே. (௪௩௦)

புந்திவீட்டினிற்பிறக்கப் புதனுறுமிடத்தினிற்க
அந்தவாறுமிடத்தி னதிபன்லக்கினத்தினிற்க
நிந்தையாமலியுமாவ னிலவுசன்மாதியோடும்
மந்தனும்புதனுங்கூடில் வடிவினிற்குள்ளனுவான். (௪௩௧)

வடிவுளதகரிற்றேளின் மங்கலனிருக்கவேதான்
முடவன்லக்கினத்தினிற்க மூன்றினிற்பிருகுமேவ

RangaRakes https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உடல்சிறுகுள்ளனுவ னுயர்குசனேரையாகில்
அடல்சனிதிரயக்காண மாகிடிற்சிறையிலொன்றும். (௪௯௨)

வேறு.

ஒன்றேழெட் டொடுவியத்திற்சுபிபாவ ருடனே உத்தமர்நோக் கறநிற்கி லுயருங்கேந் திரத்தில், நன்றியலின் றிப்பிறக்குஞ் சேய் குருடு தானே நவில்வியமெட் டாறுதி பாபர்களே யாயின், வென்றி யோடெங் கிருக்கிலவன் றூர்ப்பலனே யாவன் மேவியசன் மாதிபதி தான்பாவ னுகிக், கொன்றைமுடி யோனருளா லேவியமா றெட்டிற் கூடினன்மை யென்றென்றே கூறுவர்பா வலரே. (௪௯௩)

பாவர்கள்சன் மத்தினிலுஞ் சன்மத் தாதி பலமின்றிப் பயில கோய் கேந்திர கோணத், தீயர்களுற் றுற்கோபி யாவன் சென்மத் திறைநின்ற வீட்டோனெட் டாதீ ராதில், மேவிநாப் பலன்சன்ம கன்மனெட்டோன் மிகைச்சனியிந் நால்வர்திசை யெய்தும்போது, மேவிடுந்தூர்ப் பலர்திசைக்குட் சனிசஞ் சார மெய்திடிலோ வரிட் டமென விளம்பு மாறே. (௪௯௪)

ஆறிற்செங் கதிரதற்சேழ் சனிசெவ்வாய் நிற்கில் அரிட்டமா குங்காரி யரவொடுசென் மத்தும், வீறுசெவ்வாய் நன்கிற்செங் கதி ரோ னேழின் மேவியநா டனிலுடனே வியமதே யாகும், கூறுசபிக் கிருபாலுர்தீயோரே நிற்கில் குழவியொடன் னைக்கரிட்ட மேகூற லாகும், சிறுகர்க்கி லக்கினமாய் மூன்றுநிற் றீயோர் செம்மையோர் பன்னிரண்டிற் றீதென்ப ருளோர். (௪௯௫)

வேறு.

அருள்சன்மலக்கினுதிபாவனுய் வியமாறெட்டில்
மருவின்மெய்தனக்குநன்மை வருஞ்சவுக்கியமுமுண்டாம்
உருவமாயிலக்கினு தி புத்தமத்ததிபனுகிப்
பெருமைசேரைந்தோன்பாணிற் பலனெனவிரவிற்சொல்லுவாய்; ()

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



### வேறு.

விரவியதோர் சரீரகா ரகனும் வெய்யோன் வியமாறெட் டிற் சனிதன் வீட்டி லுற்றால், உருவுகுறைந் திடுமெங்கத் தான மாகும் ஒன் பதுபன் னொன்றிரண்டி லுற்றிட் டாலும், பரவியதோ ரரிமேஷத் திறினும் மெய்யிற் பழுதறவே சவுந்தரிய பானு மாவன், வரியுலவுங் குழற்கொவ்வை மதுரச் செவ்வாய் மட்டலருஞ் செங்கமல மலரின் மானே. (௪௫௭)

### வேறு.

இடபமேடநண்டிம்மூன்றிராசியும்
அடரும்லக்கினமாகவதனுளே
தொடருமாவிடராகுறச்சூழ்ந்திடப்
படருமுத்தமமென்றுபகர்வரே. (௪௫௮)

பகருலக்கினமன்பத்தில்ரெண்டினில்
வகையினிற்கவலதுலாபாதியும்
இகலிற்பத்திலிரண்டிலிருந்திடத்
துகளினாலைந்திற்றோன்றுஞ்சுகமதே. (௪௫௯)

### வேறு.

சுகந்தருஞ்சன்மலக்கினஞ்சரமாய்த் தோன்றிலாபத்தினாதிபனும்
மிகுந்திடுந்திரமேற்பாக்கியாதிபனும் விரும்பியவுபயலக்கினமேல்
உகந்திடுமேழாமதிபதிமூவ ருறுதிசைவாதைசெய்விக்கும்
பகர்ந்திடுமூவர்பதியுமிம்மூவர் பற்றியவிடங்களுந்தீதே. (௪௬௦)

தீதறுஞ்சென்மகாலையிலெட்டிற் செங்கதிர்நிற்கிலோசுரமாம்
கோதறுதிங்களுநிற்சலகண்டங் குசனுநிலாயுதபீடை
சோதிசேர்புந்திவியாதிபொன்மிருத்தியு சுக்கிரனுநிற்றரித்திரமாம்
ஓதியசனிதாயர்க்குறுந்தோஷ மொருவருநிற்கவொண்ணாதே. ()

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



தேவர்களமுதசந்திரன்முதலாய்ச் செங்கதிரளவுமட்டெண்ணி
மேவியதொகையைமூன்றினிற்கழித்து மீந்ததொன்றக்கவன்பிதா
ஏவியதாழ்ச்சியிரண்டதேயாயி னினியதாதைக்கிணையோகம் [வில்
பூவின்மூன்றுநிற்பிதாவினுக்கதிகம் புத்திரற்கென்றறிந்திடுமே. ()

## வேறு.

அறிந்தலக்கினத்தாதிபனுச்சமே
செறிந்துகேந்திரஞ்சேர்ந்துநல்லோருடன்
உறைந்தூதாயருறைமனையுற்றிட
நிறைந்தசீவன்பெறுவதுநிச்சயம். (சஙரு)

## வேறு.

நிச்சயமாய்ச் சன்மாதி பதிதிரலக் கினத்தும் நீடுதிர வங்கி சத்து மனைதான்கேந் திரமாய், இச்சையுட னிருகிலவ னிருந்த தலந் தன்னில் இனியவெகு பலன்பெறுவ னவைசுபாங் கிசமாய், அச்சமற நிற்கிலவன் சீவபரி யந்தம் ஆபரணத் துடன்கூடி யம்புவி யில் வாழ்வன், மெச்சியசன் மாதிபல மறக்கேந்தி ரத்தின் மேவிற் கோ பியுமாகி வியாதியுமுற் றிடுவன். (சஙச)

உற்றிடுஞ்சென் மந்தாதி யீரைந்தி விருக்க உண்மையுடன் பத்தாதி யுறுபலவீ னனுமாய்ப், பற்றிவிய மாறெட்டிற் சுபர்நோக்க நிற்கில் பயில்தத்து புத்திரனும் பகருவெகு வயதே, வெற்றிகொ ளும் லக்கினத்தின் மிகுபாவ ரிருக்க மேவியசன் மாதிபதி மிகுபல வா னாகக், குற்றமுறும் பிணிகொள்வன் சுபாசன்மங் கண்டால் குணமாமப் பிணிவேறு கொடுமையுஞ்செய் யாதே. (சஙரு)

செய்யபுதன் பாவராங் கிசையி னின்றாலும் செறிந்தந்த வுப யவங் கிசந்திலா னாலும், ஐயமற வேசிற்கிற் பின்னையிரட் டையதாம் ஆர்தனுவே லக்கினமாய்ப் பிற்பாதி யாகில், பையவதி னின்றவர் சிங் காங்கிசத்திற் றானே பரிந்துநிற்கப் புதன்சனியப் பதியதனைப்

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பார்க்கத், துய்யகருக் கொண்டிருந்த பையுடனே கூடத் தோன்ற
வே சிறுகுழவி தான்றோன்றுந் தானே. (சசசு)

தோன்றுஞ்சன் மத்திரவி புதன்வெள்ளி யாசன் றொடர்ந்தே
யுற் றிடில்வலப்பக் கத்தின்மறச் சொல்லே, ஊன்றசெவ்வாய் திங்
களாசனிக் குலவுமிடப் பக்கத் துறையுமறு வென்றென்றே யுரைப்
பாரைக் கேண்மின், என்றசுடர்க் கதிபனுற்றால் வயிற்றின்மதி சிர
த்தில் இயல்செவ்வாய்க் கிருப்பிடத்தி லெழிற்புதன்பக் கத்தில்,
ஆன்றமறு வாசனுக்கு முகத்தில் வெள்ளி துடையில் அருஞ்சனிக
குக காலிடத்தி லாமறுவா மென்னே. (சசஎ)

மறுவிலாச் செங்கதிர்கின் றிடத்தனுவிற் பிறந்தான் வார்த்தை
பிரசண்டனதி சூரனுமா யிருப்பன், உறுகலைபி னன்றனமு மில்
லஞ்சிங் கத்தில் உதித்தவனிராக் கணிலான்மே டத்திரவி நிற்கப்,
பிறந்தவன்கண் டத்திபிராய்த் தனத்திரளார்ச சிப்பன் பிறைவீடே
லக்கினமாய்க் கதிரிருக்கப் பிறந்த, சிறுவன்விழி யுன்னதவான் றிர
வியவான் கோலே சென்மமாய்க் கதிர்நிற்கத் திரவியங்கண் ணில
னே. (சசஅ)

வேறு.

கண்ணுறிடபந்தகர்சிங்கங் கண்டசன்மலக்கினமாய்ப்
பண்ணூர்சனிசெவ்வாய்கூடிப் பார்க்கிற்கொடிரண்டுளதாகும்
தண்ணூர்செவ்வாய்கண்பார்வை தான்செங்கொடியொன்றேசுற்றும்
எண்ணூர்சவுரிபார்வைக்கே யிருக்குமகரியகொடியொன்றே. (சசகூ)

கொடியபாம்பினுடனிரவி கூடியிருக்கிற்கொடிதலையாம்
நெடியசன்மமெட்டாதி நெருங்கில்ரோகசரீரனுமாம்
படியிற்செவ்வாய்சனிசென்மம் பற்றியிருக்கிற்கல்லெரிப்பாம்
உடனேயவன்றன்விழிதனக்கே யுபக்கமிகுதியுண்டாமே. (சரு௦)

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



உண்டாஞ்சன்மந்திரமாயி னதிலேசன்மத்தோனுமுறப்
பண்டேசனித்தகிராமத்தின் பதியாயிருப்பனட்டமந்தான்
மிண்டார்திரமாகிச்சனித்த வீட்டின்மரிப்பன்சன்மசரம்
கண்டால்விதேசசஞ்சாரங் காணுமென்றேசருதிடுமே. (௪௫௧)

கருதுஞ்சன்மமுபயமதாய்க் கண்டாற்சிலநாள்விதேசத்தில்
பரிதிசன்மாதிபனுகிற் பரவுங்கிரியிற்சஞ்சாரம்
சிரரோகஞ்சற்றுண்டென்பர் செவவாய்சன்மாதிபனாகில்
உருவாயுதததாலகிளியா லுறுநோய்காட்டுமுண்மையிதே. (௪௫௨)

உண்மைப்புதன்சன்மாதிபனே லுளதுவித்தைசனிதமுடன்
வண்மையாபாரத்தொழிலே வரும்பொன்வெள்ளிமனையாலுல்
பண்மைசுருதிபுணர்தனவான் பாங்கிற்சனிந்தபதிநீங்கான்
தண்மைபகராச்சுபகர்ம்மத் தலைவனென்றேசாற்றிடுமே. (௪௫௩)

சாற்றுமதிசன்மாதிபனே சரீரகாந்தியுளன்சுகவான்
நேற்றிச்சாக்கைவிற்றுண்பன னிலவுசன்மத்தைப்பார்க்கில்
போற்றுந்தந்தையருகிருக்கச் சனித்தானென்றேபுகல்வார்கள்
ஆற்றுஞ்சரத்தின்மதியிருக்க வந்தான்றந்தையன்றெனவே. (௪௫௪)

எனவும்வெள்ளிபுதனுமெலி லிந்துவிருக்கவர்தருகே
வினவிற்றந்தையிருந்திடுவன் வெய்யோன்சரத்தின்மதிபத்தில்
தனதாயிருக்கப்பிதாவிருக்குந்தலத்திற் சனித்தான்றனென்பர்
சினமார்சனிசன்மத்தேழிற் செவ்வாயேனும்பிதாதேசம். (௪௫௫)

தேசார் * மனிதலக்கினமாய்ச் செவ்வாய்பார்க்கச்சனித்தவனும்
மாசாரீமக்களையென்றே வழுத்தலாகுஞ்சனிசெவ்வாய்
நேசார்திரிகோணத்தின்மதி நிற்கப்பிறந்தநேயனையே
கூசாளன்னையெறிவ ளிர்தைக்குருநோக்கிற்னைக்கொள்வாளே. ()

* மனிதலக்கினம் - மிதுனம், கன்னி, துலாம், கும்பம்.

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



கொள்ளும்பாவமதிசன்மங்குறுகச் செவ்வாய்சனியேழில்
மெள்ளவிருக்கிற்குருநோக்க விரும்பியெடுத்தார்வளர்க்கவுய்வன்
தெள்ளும்புதன்பாம்பரசன் மதிசேர்ந்துசன்மதநிருந்திடவே
பிள்ளை பிறக்கில்வம்சத்தைக் கெடுப்பனெனவும்பேசுவரே. (௬௫௭)

பேசும்லக்கினஞ்சசிலக்கினம் பிறங்கத்தூமனிருந்திடவே
வீசும்வாணுள்குறையும்விதி பாதனிருக்கிற்புகழ்நாசம்
மாசில்பரிவேடன்றுங்கமதி போஞ்சக்கிரசாபனுநின்
மேசின்குலங்கணசிக்குந்துசன் மேவிற்றனம்போமெனப்பேசே. ()

வேறு.

பேசும்லக்கினமீனண்டிற் பிறந்தவர்தங்கட்கெல்லாம்
பாசமாய்மகாதிசையின் பலன்களைப்பார்க்கும்போது
தேசுறுகரியபாம்பின் றிசைவரிற்பாக்கியங்கள்
தூசுபொன்சோபனநற் சுபபலன்பெறுவர்தாமே. (௬௫௯)

தார்செறிமகரங்கன்னி தனிற்பிறந்தோர்கட்கெல்லாம்
பார்செறிமகாதிசையின் பலன்களைப்பார்க்கும்போது
சீர்பெறுகேதுவான திசைவரும்போதுசெல்வம்
ஊர்திசாரசராற் சன்மானமுண்டாங்கண்டீரே. (௬௬0)

வேறு.

பேசுஞ்சன்மஞ்சராசி பிரியாச்சரத்திலாதிபனும்
பாசஞ்சரத்திலுறத்தோன்றிற் பார்க்கிற்றூலசரீரனுமாம்
வீசுலக்கினஞ்சரமாயவ் வீட்டுக்குடையோன்சரத்திருக்க
தேசம்விடுத்தேசஞ்சாரத் திகழுத்திரிவனெனச்சொல்லாய். (௬௬௧)

முதலாம்: :ாவம் - முற்றிற்று.

RangaRakes
https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



# இரண்டாம்பாவம்.

## நேத்திரபலன்.

எழிற்கண்ணாதிபன் நீக்கோளா யெட்டினிற்சனியோடிக்கும்
பழிகொளாருமிடத்திற் பானுவேற்பூனைக்கண்ணும்
விழிகள்கோண்பாவனாய் லக்கினாதியைமேவியாறெட்
டொழிவியத்துறிலோகர்ப்பத்துறுங் குருடாகத்தானே. (௪௧௨)

சுக்கிரனேத்திராதிபதியெனத் தோன்றியெட்டில்
நிறகவோராறில்வெய்யோ னிற்கிற்கண்ணோய்பிற்காலம்
தக்கவேறரிமேஷத்திற் சனிகுசன்றானுற்றாலும்
மிககதாமதரத்தான மெழிற்கொடிசுற்றித்தோன்றும். (௪௧௩)

லக்கினத்ததிபனோடி யிரண்டிடத்ததிபன்சுங்கன்
திக்கெனக்கூடமூன்றிற் செங்கதிர்நிற்குமாயின்
ஒக்கவேகண்ணில்லாம லுதிப்பனாதித்தனல்லால்
மைக்கணாய்மதியமுற்றான் மாலைககண்ணாகுமென்றே. (௪௧௪)

குறைவினேத்திராதிசுயகன் லககினத்தோனுங்கூடி
நிறையமூன்றாமிடத்தினிற்கி னேத்திரரோயாகும்
நறைகுழலக்கினாதி யிரண்டிடத்ததிபன்வெள்ளி
அறையவோரிடத்தினிற்கி லந்தகனாவன்கண்டீர். (௪௧௫)

### வேறு.

நேத்திரத்தானத்தாதி சுங்கனாகி நிறைசன்மாதியைக்கூடி மூன்றி னின்றால், நேத்திரரோ கம்மந்த நேத்தி ராதி நிலவாகிப் புகருடனே யிரண்டி னின்றால், நேத்திரந்தா னிகெடொறு மொளி கொ டாது நின்றகட கந்தனிலுற் பவித்த போதும், நேத்திரத் தான் மதிசுங்கன் கூடி நின்றால் நிகழ்பிறவிக் குருடனுமா திற்பன் றானே. (௪௧௬)

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



சிங்கமே நேத்திரத்தா னெந்தா னாகிச் செங்கதிர்சங் கன்கூடிச் சிங்கந் தேற, அங்கவரோ டெந்தத்தா னாதிபதி யேனு மவரவர்தங் காரகரா யினும்வந்தாற் றாலும், சங்கிபபோர்க் குரியர்சமக் கெய்து நேத் திரநோய் தனதுபதி யாகினுச்சந் தானுகி னன்மை, துலாகமதி லியத்தறிலோ விழியொன்றே யூனம் சூரியனுல கூடில்விழி யோ விரண்டும் போமே. (௪௬௭)

வேறு.

சோதிலங்கினத்திற் குசன்சூழ்ந்திட
ஓதுமட்டமதநோன் நேத்திரத்தறப்
போதவட்டமத்திற் பாவர்போந்திட
ஏதநேத்திர நோயும்வந்தெய்துமே. (௪௬௮)

வேறு.

சேருஞ்சுங்கன்சன்மாதிநியகள் கூடியாறெட்டில்
நேரும்வியதிற்பலமற்றே நிற்கின்மாலைக்கண்ணுகும்
ஏருஞ்சந்திரோன்சன்மாதியிரண்டாமாதி வெள்ளியொன்றாய்த்
தீரும்வியமாறெட்டிலுறச் செப்பும்பிறவிக்குருடனுமாம். (௪௬௯)

ஆமேயிரவிசுக்கிரன் பெண்டாதிசென்மத்தாதியிவர்
தாமேகூடியவரவர்க டானந்தனக்காறெட்டுவியத்
தாமேயிருக்கிலவரவர்க டிட்டிககூனஞ்சார்ந்திடுமே
நாமேசொல்வம்பலபார்வைநயனபலன கண்டெனுஞ்சொல்லாய். ()

சொல்லும்பலனேத்திரத்தானஞ் சூழ்ந்தாரதிபாற்பலன்கள்
எல்லோன்செவ்வாய்மேனோக்க விந்துகுருவுஞ்சமபார்வை
வெல்லும்புதற்குவெள்ளிக்கும் விழிபக்கத்தேநோக்கியிடும்
நல்லராகுசனிதனக்கே நயனங்கீழ்நோக்காயிடுமே. (௪௭௧)

இடென்சென்மாதிசனிச்சனிகண்டிடக் கண்ணேயாமிரண்டாதி
உடன்சூரியனுங்கூடியிற்க மற்றுங்குளிகனுடன்சனிதான்

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



அடைந்தேநோக்கக்கண்ணேயா மவ்வீடேசலராசியெனில்
தொடர்ந்தேகாணிரீர்பரவித் துளிக்குமவன்றன்விழிதனிலே. ()

சோதிரவியும்பாவருடன் சூழ்ந்துபலமற்றேவியத்தின்
மீதிலிருக்கவலக்கண்போம் விரவுஞ்செவ்வாய்பலனற்றே
ஏதவியத்திலுறைந்திடிலோ விடக்கண்ணூனமிவிருவா
தீதாம்வியத்திற்கூடிநிற்கத் தெரியாதிரண்டுதிட்டியுமே. (௱௭௩)

திட்டமுடனேசனிசெவ்வாய் சேர்ந்திரண்டிற்பனிரண்டில்
கிட்டியிருக்கில்விழிக்கூனங் கிரணரவிசந்திரன்வியத்தில்
ஒட்டியிருக்கில்விழிநோயு முற்றந்தகனைப்பிறக்கும்வகை
துட்டரவிசேய்மதியரசன் சுங்கனேவரெங்குறினும். (௱௭௪)

எங்கோனிரவிவெள்ளி பலனில்லாதிருக்கவவருடனே
பொங்குஞ்சன்மாதிபன்கூடிற் பொருந்திற்பிறவியந்தகனும்
தங்குமைந்தாமாறுதிதானுஞ் சன்மந்தனிலிருக்கச்
சுங்கனிரண்டாதியைக்கூடிற் சொல்கண்பிடுங்கப்படுங்கண்டீரா. ()

காணுநேத்திரரோகமினிக் கதிர்சேர்மதியுங்காரியிவர்
வேணுமிரண்டிலாறெட்டில் வியத்தினிற்கரோகமிகத்
தோணுமிரண்டிற்பன்னிரண்டிற் சோமன்பரிதிகூடுகினும்
பூணுமெட்டிலிரண்டதனிற் பொல்லாரிருக்கக்கண்ணேயே. (௱௭௬)

வேறு.

வேல்விழிமாதே விளம்புவலக்கண்
சாலவிரண்ட தாமிடங்கொண்டும்
ஏலுமிடக கண்ணீராறலும்
இலசுபா சுபங்கயோத்தேர்ந்தே. (௱௭௭)

வாக்குபலன் - வேறு.

குடும்பத்தானுதியோடு குலவியபுதனுங்கூடி
உடன்படவாறுந்தானத் துற்றிடிலூமையாகும்

8

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



இடம்புறமூன்றுமாதி லக்கினத்தகிபன்றானும்
றிடம்பெறக்கூடி லூமையாகியே திரிவன்றானே (௪௭௮)

வேறு.

வாக்குத்தானதிபனொடு புசனுங் கூடி லருந்தெனம மூன்றாறின் மருவி லூமை, ஆகுமவ னுடனெக்ரத் தானாதாரி யலாவா தங்காரகரா கிலும்வந் துற்றால், ஊக்கமுற வவரவரு மூலம யாவ னுற்றவர்தம் பரிபாகி லுச்ச மாகில், வாக்கூன மறமொழிவன கணமா கண்டும் வனமுறமுக் கவியுமென வழுத்து மாதே. (௪௭௯)

வேறு.

* மாலமன்னனோடு வாக்குத்தானாதிகூடிக்
கோதுறவியமாரெட்டிற் கூடிலூமையாவன
ஓதியதக்கைசாயமற் றோர்தானத்தனைக்கவாது
நீதியாயிருக்கிலூமை நிச்சயமென்றகூறே. (௪௮௰)

கூறியலக்கினாதிபனிகொன் கூடியாறெட்
டேறியவியத்தினிற்க லூமையாமிரண்டாமாதி
பெறுடனவரைக்கூடி லூமையாம்பின்மற்றோரும
ேறிடாதவரைக்கூடி லூமையாய்த்திரிவன்றானே (௪௮௧)

வித்யாபாலர் - வேறு.

சனியவாதறவா தானுமேகூடிப
புனிதாயிருக்கப் புலவனுயககவிதை
இனிதெனவுரைத்தே யெனாடைசையெங்கும்
மனுவுடனீந்த மன்னனருவனே. (௪௮௨)

வேறு.

பொன்புதனிரண்டின்கோவும் பொருந்தியகேந்திரத்தில்
பினதிரிகோணமேறிற் பெற்றிடும்விதலைலாபம்

---

* மாலமன்னன் - புதன்.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



இன்பமாயிவரெட்டாறி லிருந்திடிலில்லைவித்தை
அன்புசேர்கணக்கனுச்ச மாகினல்வித்தைகூறே. (௪௮௩)

கூறியபுதனுமேழாமதிபனுங் குருவுங்கூடிப்
பேறுடனதிரிகோணங்கள் கேந்திரம்பிடித்திட்டாலும்
வீறியதனதுவீட்டும் விரும்பியவிரண்டாம்வீட்டும்
சிறிடாதிருந்தபோது படிவித்துவானுமாமே. (௪௮௪)

ஆனகேந்திரத்திற்புந்தி யிருக்கரெண்டாம்வீட்டாதி
தானுமேயுச்சமாகத் தரும்புகருபயமேவ
வானமீன்மூன்றினல்லோ ருறவெள்ளியுச்சமாக
யானிலத்துதித்தகாளை சோதிடம்வழுத்தவல்லான். (௪௮௫)

## வேறு.

வல்லரெண்டிடத்தோன் குருசுக்கிரன்
செல்லுமூலத்திரிகோண முச்சமாய்
அல்லபாவராருக நோக்காவிடில்
நல்லதர்க்கம் படிப்பனலம்பெற. (௪௮௬)

நலஞ்சிறந்தரெண்டாம் வீட்டதிபனுங்
குலஞ்செறிந்த குருவும்பலமதாய்ப்
பலஞ்செறிந்த புகர்பார்க்கின்றிடில்
பிலஞ்செறிந்த விலக்கணம்பேசுவான். (௪௮௭)

## வேறு.

பிரக்கினைசேர் திரிகோண கேந்திரத்தும் பிரியமுடனேயுதயத்தினிற்கிற் றமிழ்வித்தை பெருகும், திருக்குயிலா துயர்செவ்வா யொன்றிருந்த காலத் தெலுங்குவித்து வானவன் கருமகோணத்திருக்கவே துருக்கரா ரியர்பாஷை தமக்கு நிபுணவித்து வானவன் வெள்ளிகுரு மேவில், திரக்கனமாஞ் சாஸ்திரங்க ளமைக்குமதி வல்லதிடவித்து வானென்றே செப்பிடவு மாகும். (௪௮௮)

RangaRakes
https://lankathamilnews.blogspot.com

ஆருயிரண் டாதிபனும் புதனுமுச்ச மாயிருக்கச் சன்மத்திலாச னிற்க, ஏகனாய்ச் சனியெட்டி லுறக்கணித வித்தை இவனுக்குக் கோபுராங்கி சத்தின்மந்த னிருக்க, வாருடனங் காரகனங் கிசத்தாச னிற்க மறையோது வானிரண்டா மாதிகதி ராகத், தாகமுடன் செங்கதிரைத் தமனியனுங் காணத் தர்க்கசாஸ் திரம்படிக்குந் தாஷ் டிகனுங் கண்டீர். (௬௮௯)

கண்டசன்ம லக்கினத்திற் சுக்கிரன்பொன் னிருவர் கலந்து நிற்க வேந்தனாநற் கதிரோன்றா னும்மே, மண்டியசிங் காங்கிசத்தி லேறிநிற்க வந்த மற்றுஞ்சுக் கிரன்கடக வாங்கிசத்தின் மன்ன, அண்டியிந்தப் படியிருக்கச் சனித்தான்றா னல்ல அவனியிற்சாத்திர மாறு மறிந்திடுவோ னென்றே, எண்டிசையெங் கும்பரவுங் கீர்த்திமா னாகி இருப்பனெனக் கலைவல்லோ ரியம்பிடுவர் தாமே. (௬௯௦)

வாரேறு முலையாய்கேள் சன்மந் தன்னின் மதிமகன்சூ ரியன் குருவு மகிழ்ந்து நிற்கில், சீரேறு தனம்படைத்துப் புலவ னாவன் செங்கதிர்சுக் கிரன்புந்தி திங்கள் சுன்னும், பாரார்பொன் னிவர்க ளொருவீட்டிற் கூடில் பரிமளிக்கும் வித்தைபிர பலனா மாகித், தாரேறு புயவலியன் றனவா னாவன் சாந்தகுண வானுமாய்த் தரையில் வாழ்வன். (௬௯௧)

## தனபலன்.

சென்மாதி பதிக்கிரண்டா மிடத்தி னல்லோர் திறன்மூன்றா மிடத்தீயோர் நான்கி னல்லோர், நன்மார்க்க முடனிருந்தாற் றன வான் சன்ம லக்கினத்தோ னுபயத்தி னண்ணினும்பொன் னுளானும், சன்மார்க்க முடனந்தத் தனபா வத்தில் தரும்பாக்கிய லாபாதி தரிக்கிற் பார்க்கில், துன்மார்க்க மறவளகைக் குபேரன் போலத் தொலைவிலாத் தனம்படைப்ப னெனச்சொல்வர் சால. (௬௯௨)

www.facebook.com/ebooksintamil

https://lankathamilnews.blogspot.com

RangaRakes

www.facebook.com/ebooksintamil



சாதகன்லக் கினமுதலாய் லக்கி னாதி தானிருந்த வீடளவு மெ ண்ணிக் கண்ட, ஒது தொகை லக்கின திபனைத் தொட்டே உடமெ ணணிக் கண்டமனை பாவர் வீடேல், எதமுறுந் தரித்திரயோ கமய ளாகும் இனிமையுள்ளோர் வீடாயிற் றனவா னவன், போதுசனமங் தனக்கைந்தீ ராறி ரண்டும் புனிதர்மனை யாகிற்பொன் னுளனே யாவன். (௪௬௩)

வேறு.

ஆவன்சன்மத்திற்சனியு மடுத்தநான்கிலம்புலியும்
மேவுமேழிற்செவ்வாயும் விளங்குபத்தில்வெய்யோனும்
கோவும்புதன்சுக்கிரன்றானுங் கூடியொருவீட்டினிலிருக்கப
பூவுக்கரசாய்த்தனவானாய்ப் பொருந்திவாழ்வன்கண்டீரே. (௪௬௪)

கண்டுமொழியாயெட்டாறிற் கருதுமூன்றிற்பன்னொன்றில்
மிண்டரிருந்துலக்கினத்தைப் பாராதிருக்கின்மிகுசெல்வம
கொண்டுவாழ்தற்கனுசாரி குலவியிந்நால்வருநீசம்
அண்டியிருக்கினீசர்மனை யணுகிற்றனவானவானே. (௪௬௫)

ஆவரிந்நலக்கினத்துக் கதிபனுச்சராசியினும்
மேவவலதுநீசர்மனை விரும்பியிருக்கிற்றனவானும்
தேவர்தொழுஞ்சந்திரனுடனே யுசசநற்கோளசேர்ந்திடினும்
தாவுகுடும்பனுச்சமனை தக்கோர்நிற்கத்தருஞ்செல்வம். (௪௬௬)

வேறு.

செல்வந்தருபத்தாமதிபதி சென்மாதிபனும்
வல்வந்தகுடும்பாதிபனும் வளரங்கிசைமன்னும்
செல்வந்திகழுங்கேந்திரமதனிற் சுபர்காணில்
நல்வஞ்சிறுவயதிற் றனபதியாகவுநண்ணும். (௪௬௭)

நண்ணுஞ்சென்மத்தாதிப னவின்மூன்றாதிபனும்
ஒணணிப்பலமாகப் புருஷக்கோணுறநோக்க

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வண்ணந்தருமூன்றுதிபன் மருவப்பதிகாண
ஏணணன்சிறுவன்றாய் பரமாமன்பொனும்வருமே. (௨௯௮)

வேறு.

வருஞ்சன்மலக்கினத்து மாமதியிருந்தவீட்டும்
இருபுறந்தன்னினல்லோ ரிருந்திடிற்றனவானவன்
ஒருமனை தன்னிலுற்றா லோதியபலனிற்பாதி
தருமொருபுறத்தினிற்கிற் றனமுங்காற்பங்கதாமே. (௨௯௯)

வேறு.

பாக்கதாகு மூன்றுமிடப்பார்த்திபன்
ஓங்குமொன்பதா மாதிபுடனுற
ஆங்கிவர்க்கு மினியசினேகமாய்
ஆங்குறத்தமையன பொன்னனூருமே. (௩௦௦)

வேறு.

அனுகூதிசேர்வகை யாதவனுற்றுனையர்பொன் அன்னைக்கப் புவிசெயவா யாற்றனதுபொருளே, கனுகுபுதனுற்பகைஞர் பொருளாசன்றன்னல் நல்லுறவோர்நிசுயக னுற்குமனைவியரால், பணமருவுங்காரியினு லடிமையுளோர்பொருளும் பண்பொடுசேவித்தவர் பொன் பாங்குடன்வந்தடையும், குணமொடுலக்கினஞ் சோமன்றனக்குப்பத்தாரும் குடிவீட்டுக்குடையோனைக் கொண்டுபலன் கூறே. (௩௦௧)

கூறியலாபாதி யொன்பதாமதிபனுடனே கூடினுற்பழைய தனங் குறுகவந்துசேரும், பேறுடன்பத்தாமாதி பாக்கியத்தாற்றிடினும் பெருமைசெறிபத்தாதி பிரபலநற்கோளாய், வீறுடனுத்தமர் மனையிலுறத் தருமத்துடனே விரவுபிரயாசமறவே நிதியம்படைப்பன், ஏறில்குருதனஞ்சேரும் பத்தாதிமெலிந்தே இருக்கிலொருவரைச சேவித்தெய்துபொருளற்பம். (௩௦௨)

https://lankathamilnews.blogspot.com

பொருள்செறிபத்தாமதிபன் பிரபலவுத்தமனைப் பொருந்திப்
பத்தினிலிருக்க யாகாதிகருமம், அருளுடனேபுரிந்து தனக்கேடி
யின்றிருப்பன் அமர்மூன்றுமாதி பலமாகசசன்மத்தோன், மருளுந்
தார்ப்பலனைக லாபாதிமூன்றில் மருவிலுடன்பிறந்தவர் தன்பொருள்
வந்துசேரும், தெருள்சன்மந்சந்திரலக்கினத் திருந்தார்வகையில்
சேர்ந்தவநாமிராவவர்பொன் சேருமிவன்றனக்கே. (௱௩)

தனஞ்சேரும்வகை பொன்பதாமதிபன்றிசையில் தரும்பத்தா
திபன்புசிப்பிலப்போங்காசாத்தில், இனஞ்சேர்நான்காதிபன் பத்தா
மிடத்திலிருக்க இயல்பத்தாமதிபனுக்கு நாலாம்ராசியிலும், கனஞ்
சேருங்குசனுடைய கேந்திரத்திலேனும் கலந்திருக்கப்புராதனமாங்
காணிமனையதனில், முனஞ்சேர்பத்தா மதிபன்றிக்கினிட்சேபம்
முதற்கொளும்வாழ்வரென மொழிந்திடுவர்தக்கோர். (௱௪)

தக்கரிஷபத்தின் மதிவிரிச்சிகத்திலாசன் தானிருக்கிற்றனவா
னாஞ்சுக்கிரன்வீட்டரசன், மிக்ககுருவிற்குசனுமிருக்க வளர்பிறை
யும் வந்தனுடனேகூடப் புதனரசன்கூடி, நிற்கலக்கினத்தன்னிற்
சுக்கிரனுமிருக்க நிறைந்ததனவான்கல்வி நிபுணனுமாயிருப்பன், சுக்
கிரனுச்சம்பெற லக்கினத்தரசநிறைந்த சோமனைப்பார்வைகள்காணிற்
றுலங்குதனம்படைப்பன். (௱௫)

படைத்தவொன்பதாமதிப னுதிபனின்றிடவே பண்புடைய
மாதுலன்றன் பொன்பரிந்துசேரும், எடுத்தவொன்பதாமதிபன்
பொன்னுதயாதில் இருந்தக்காலம்மாயிக் கிசைந்தபொருள்சேரும்,
தொடுத்தவைந்தாமதிபதியுஞ் சுபனுயப்பாக்கியத்தில் சூழ்ந்திருக்
கிற்புத்திரிக்குத் துலங்குமணஞ்சூட்டி, அடுத்திருக்குமருமகன் றே
டியதனங்களெல்லாம் அடைந்துசுகவானாகி யம்புவியில்வாழ்வன். ()

அம்புவியிற்குருவும் பத்தாமாதிபதியும் அன்புறநற்சுபனுமாய்
லக்கினத்தாதிக்கு, இம்புவியின்மித்துருவா யிவருடன்வெய்யோ

www.facebook.com/ebooksintamil



னும் இசைந்திருக்கிற்பிதா நிதியமெய்துமிவன்றனக்கே, வீம்பமதி யங்கூடி லன்னைசெமபொன்மேவும் மேதினிமைந்தன்கூடில் மேவ லர்பொன்சேரும், நம்பியமால்கூடின் மித்துருசனமாமரசன் நண்ணி யுறிற்பிராதாபொன்று னயர்ந்துசேரும். (ருoஎ)

வேறு.

சேருஞ்சுக்கிரன் கூடிற்றெரிவையர்
ஆருமாஞ்சனியிற் கடுத்தோர்பொருள்
கூறும்பாம்புகள் கூடிலீனத்தொழில்
சாரவேபுரிவார் தனஞ்சாருமால். (ருoஅ)

வேறு.

சாரும்பத்தாமதிபன் சுபக்கோளாகத் தக்கோர்வீட்டிற்பிறையு மாசன்றுனன்றிச், சேரும்பொன்னவனீசமத்த மனமாகித் தீயோர் வீட்டினிலிருக்கத் திரவியங்களில்லான், நேரும்பத்தாமதிபன் றூன் கெடத்திலிருக்க நிட்சேபங்கண்டெடுப்ப னிறைந்த கல்வியாலும், பாரின்மேவிய தமரோரார்தங்களாலும் பரிவுடன்பொன்சேருமென வே பரிந்துகூறே. (ருoகூ)

வேறு.

கூறும்ரெண்டா மிடக்கேந்திரத்தினில்
வீறுமன்னவன் மேவரெண்டாதிபன்
ஊறுமாறெட்டொடு வியத்துற்றிடில்
ஏறுந்தந்தைதனஞ் சற்றுமில்லையே. (ருக0)

வேறு.

சாலமதிதனக்கிரண்டிற் சனிதாநிற்கில் சத்துருர்தனக்குறுன் காம்வீட்டாதி, மேலவர்களுடன் கூடிக்கேந்திரங்கள் மீதிருந்தாத் றந்தைபொருள் வேற்றோர்கொள்வர், பாலருக்குச்சேராது பாலன்று

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



னும் பாக்கியவானாகி வெகுபணங்கடேடி, ஞாலமதிற்கீர்த்தி யாகிய
னும்பூமி ராசனைச்சேவித்திருப்ப னலமாய்த்தாமே. (ருகக)

வேறு.

மேதகுநான்காமாதி விரவுகேந்திரங்கடன்னில்
ஆதவனிருக்கவேதா னந்தநான்காமிடத்தில்
ஓதியநல்லோர்மேவி லுறு பிதாதனத்திற்காசு
பாதியுமிவனுக்கில்லை பரதேசத்திடையிற்செல்வன். (ருகஉ)

வேறு.

ரண்டாமாதிசான்மிகவேயிருந்து கேந்திரமேறிமிகக்
கொண்டேதனத்துக்காரகனுங் குலவியுச்சமாகியிவர்
பிண்டாயிருக்கத்தனபதியாய் விளங்கியிருப்பனறிவுள்ளோன்
பண்டேசகத்திற்பொன்றேடிப் பதியிலிருப்பனெனச்சொல்லும். ()

சொல்லுமிரண்டாமாதிபதி சூழ்ந்துலாபத்தினிலிருக்க
வெல்லும்லாபன்பாக்கியாதி விரும்பியிரண்டிலுற்றிடவே
நல்லகுணமுஞ்சருமனுமாய் நான்குலட்சம்பொன்றேடி
அல்லலறவேவாழ்ந்துண்டே யவனிதன்னிலிருந்திடுவான். (ருகச)

இருந்தவில்லேலக்கினமா யிதிலேகுருவுந்தானுறவே
பொருந்துந்துலாத்திற்சனியுச்சம் புகலாபாதிநான்கிடத்தில்
திருந்தியிருக்கத்தனந்தேடித் திகழ்வனீதிதவறுமல்
தெரிந்தேபலரைரக்ஷித்துச் செம்பொன்கோடிதேடுவனே. (ருகரு)

வருமேதனுசுகுடமீனம் வாழுங்கன்னிரிஷபமுடன்
புரமேய்நவகோளிந்தமனை புகுந்தாற்பிறவர்க்கரிதாய
திரமேயோகநவகோடிசெம்பொன் றேடிராச்சியங்கள்
உகமேயாள்வன்லக்கினமு மோங்குந்தனுசிற்பிறந்திடவே. (ருகசு)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



### வேறு.

வயதிரேக்காணத் திறைபுகர்கூடிட
ஆயலாபாதி சுபர்வர்க்கமேறிட
ஆயவுலகிலரும்பொருள கோடி தான்
நேயமாய்த்தேடுவ னென்றுமொழிந்திடே. (௫௧௭)

### கிரகாரம் - வேறு.

இலகுபிரண்டின்மூன்றிடத்தி லிரவியுறிற்கார்ப்புடன்கசுகை
நிலவுபாகுசசிதனக்குவர்ப்பு நீசெருசற்குக்குளிர்மைகைப்பே
அலருபுதற்குச்சகலமுமே யாம்பொன்னுகுமதுரமழல்
பலகசசனிக்கேகவர்ப்பாய்த்தண் கமர்சுக்கிரற்குப்புளிகுளிர்ச்சி. (௫௧௮)

இரண்டாம்பாவம் - முற்றிற்று.

---

## மூன்றாம்பாவம்.

### சகோதரபலன்.

புலவர்தமூன்றாமிடந்தன்னைத் துணைவர்பலனைச்சொல்லுங்கால்
இலகுதமூன்றாமிபதியு மிருந்தார்கண்டார்தமைக்கொண்டு
நலமுமொருசசம்பகைநீசநட்பு மறிந்தேயுரைசெய்யப் [லே.
பலன்கொள்பெண்ணானபிரகங்கள் பார்த்துத்துணைவர்பலன்சொல்

சொல்லுஞ்சுகன்மூன்றாமிடத்தி லிருக்கிற்பார்க்கிற்றுணைவரற்பம்
வெல்லும்பதியொன்றிற்குறு மேவின்மூத்தோர்மிகவுண்டாம
வல்லவிரண்டாமிடத்திற் செய்மருவவுடனேவருந்துணைவர்
நல்லமும்மூன்றாய்ப்பார்த்து நாரியாணித்தனையுன்னே. (௫௨௦)

https://lankathamilnews.blogspot.com
RangaRakes

www.facebook.com/ebooksintamil



வேறு.

உன்றுமூன்றுமிடத்திபன்குசன்
நன்னாளன்காமதியலுங்கூடிலும்
தன்னமூவருநான்குறத்தந்துவோ
அன்னர்பயகுழன்னேயத்துசேருமே. (ருஉக)

வேறு.

சேருஞ்செய் வாய்புடத்தை வைத்துக் கொண்டு செய்யகருவ கோள்புடத்தை யெடுக்கி லப்போ, சேருமந்த ராசியிற்பொன் மருவும் போது ந்திதுவியா யோகக்கிரிட்டங் கருகக்கோ டண்டுகைப், பாருமந் தய புடத்திலயுகா ரகவோ வாயுகிப் பண்பொங்கின் றிரோசி தவியிலா சன்வந்தால், வருமுற்று ரும்மதியச சேட்டனபார் விட்டீட உயர்பர மபதியமாரு மெனவுரைசெய் வாயே. (ருஉஉ)

உமைசெறி மூன்றுமாதி வாபாதி பதிக்கே உறவாக மூன்றதி யுயர்ந்த பிரபலருய், வரவுடன்மித் திரருடனே கூடியே வாய மதிவி ருகக வவருடனே வந்தாளன் கூடிர், திரமுடனே யிருந்தகொசைப் படி நுனைவ குண்டாந் திரிபூமா னெனகபிரகச செயலறிந்து பகர் மின், கரியநமுன் மதிவதனக் காவியங்கண் ணிமிரிய கனியமுதம் போலு மொழி யாயகன்னி யாரே. (ருஉங)

ஆகடகர்த்தேன் மீனலக்கி னத்தைக் கண்டே அன்புடனே சவ பாகம் பணைவிளையந்தாம் பகுகில், பாரிலுதித் தான்பின்னே பிறந்த தன் னிக்குப் பக்குவமெப் படியென்னி லக்கடக மாயின், காரிவெகு தூலகாயம் முடைய னாவன் கவிழ்தனா கிற்பேய்யோற் காலகுறுகிப் பருத்துச், சோரவுருக் குலைந்திருப்ப னாமீன மாகில் செய்யகான முட மாகித் திரிந்திடுவ னென்னே. (ருஉச)

https://lankathamilnews.blogspot.com

RangaRakes

www.facebook.com/ebooksintamil



### வேறு.

என்னுமூன்ரு மதிபதிபுடத்திலேற்றிடு செவ்வாய்புடத்தையுங்கூட்
டுனனிடுராசிகுருவருங்காலக் துணையுறுமிப்புடங்கூட்டி [டித்
மின்னியராசியங்கிசமட்டாய் மேஷமேமுதலவாயெண்ண
மன்னியதுணைவர்தொகைவரும்பாவர் மருவிடிலழித்திடுமென்னே.

### வேறு.

ஆருமிடத்திலாயகருங்கோள்
வீருயிருக்கமேவுமவன் றிசை
பேருய்வறினும்பெலமுள்ளசகோதரம்
நீருயுயிர்விடுகேமியோரறிய. (ருஉசு)

### வேறு.

அறிதாதை யொன்பானுக் கொன்பா னுலும் அன்னைக்கோ நா
ன்கினுக்கு நான்கி னுலும், செறிகனிட்டற் கொருமூன்றின் மூன்றி
னுலும் சேட்டனுக்கப் பன்னொன்றின் பன்னொன் றுலும், உறுமா
மன் றனக்கும்புத் திரற்கு மைந்திற் கோரைந்தி னுலுமுயர் சகோத
ரங்கள், நறுங்குழலங்கிசாரசியாண் பெண்ணோர்ந்தே நவிலுவா யத்
தொகையி னளவே யென்று. (ருஉஎ)

### கர்ணபூஷணபலன் - வேறு.

மூன்ருமிடத்திற்சுபக்கிரக முற்றப்பலமாயுறநோக்க
மூன்ருமாதிபலவானுயிருக்க மூன்றிலுச்சருறத்
தோன்றுகர்ணபூஷணங்கள் சூடியிருப்பன்சுகமாக
ஆன்றகர்ணுபரணத்தையளிப்பா ரிவரென்றறைவாரே. (ருஉஅ)

அறையும்மூன்றிற்சுக்கிரனே யமர்ந்தான்முத்துக்கடுக்கனுறும்
இறைவனிருக்கிலபாஞ்சி யிரவிசெவ்வாய்க்கிரத்தினங்கள்
அறையுப்புதற்குர்சாமவன்ன மணியுஞ்சேருமிதுவல்லால்
நிறையுமதியுற்றிடிற்சகலாபரணம் பெறுவர்நிச்சயமே. (ருஉகூ)

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



வேறு.

நிச்சயமாங் காரியுறிற் றிருமேனிக் கடுக்கன் கீள்கருங்கோ ணீலஞ்செம் பாம்புக்குச சிவப்பாம், அச்சமற மூன்றுதி யிருக்கின்ற வீட்டுக் காதிபல னுயிருந்தா லணிசெவிப்பூ ணுளதாம், உச்சிதமா யிவை யெல்லா மிடக்காதுக்கென்ப உயரும்லாபாதிபதி யுறைந்தருளும்வீட்டோன், இச்சையுடன்கேந்திரத்தி னல்லோர்கண்டிடவே இருக் கில்வலச்செவிவளம்பூ ணியம்பவும்பூண்டிமொல். (௩0)

போசனபாத்திரபலன்.

எண்ணியரெண்டாமாதி லாபமூன்றுதி இரமிலாப்பாவியர் கண்டிடத் தனியேநின்றால், உண்ணவுநற்கலமில்லா னுகாதரெண்டாம்வீட்டில் உயருஞ்செயகதிரோன் பெற்றாலகிலுளளோர்காண, நண்ணியதோர்சனிமேவ ரெண்டாம்வீட்டாதி நண்பொமூன்றும் வீட்டி னயந்தநிற்கத்தானும், பண்ணுடனேசுபர்பார்க்கில் வருமவெள்ளிக்கலமேபாவகேகாள்விழிரோசகப்படைப்பதுவெண்கலமே.

மூன்றாம்பாவம் - முற்றிற்று.

# நான்காம்பாவம்.

வாகனபலன்.

சுசிவாகனுதிசன்மத்ராதி யிம்மூவர்கூடில்
அசுவவாகனமுண்டாகு மவருடன்வெள்ளிகூடில்
வசையி * லாந்தோளியுண்டாம் வாசனாத்தானத்ராதி
ஒசிவின்றிவியத்திலின்றி யுற்றிடிற்சிவிகையுண்டே. (௩௨)

* ஆந்தோளி - தண்டிகை.

https://lankathamilnews.blogspot.com

www.facebook.com/ebooksintamil



பரிவுடன்பாக்கியாதிபதி வாகனத்தானத்தில்
குருசுக்கிரனோடுகூடி யிருந்திடிலலது நோக்கில்
கருதியகனகதண்டிகைவரு மிவரோடிந்த
பிரியமாய்நிற்கிற் பூசசக்ரகுடைபெறுவர்தாமே. (௫௱௩)

பூசக்ரக்குடைதந்தானைப் பொருந்தியேழுதிபனிற்கில்
வீசுசாமரையுண்டாகு மிருபாக்கியத்தோனுனைகோன்
பாசமாம்பத்தினிற்கப் பத்தாதிபதிசேமத்தில்
தேசமாயநிற்கிற்சிங்காதனமுள னிருபன்பாரில். (௫௱௪)

வேறு.

